பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் (ஏ) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை- 600 009.
ஹேவிளம்பி, பங்குனி 2,
திருவள்ளுவர் ஆண்டு –2049.

**கடித எண். 6112/ஏ2 / 2018-1, நாள்: 16.03.2018**

அனுப்புநர்
டாக்டர். சீ. ஸ்வர்ணா, இ. ஆ. ப .,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை – 9,
தலைமைச்செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகள், சென்னை – 9,
மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட நீதிபதிகள் மற்றும் தலைமை நீதித்துறை நடுவர்கள் உள்ளிட்ட அனைத்துத் துறைத் தலைவர்கள்,
வருவாய் நிருவாக ஆணையர், சென்னை – 5,
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை – 104,
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 3.

ஐயா / அம்மையீர்

பொருள்: மனுக்கள் – அரசு அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் குறைதீர் மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான நடைமுறைகள் – அறிவுரைகள் வெளியிடுதல் தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 114, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ஏ) துறை, நாள். 02.08.2006.
2. அரசாணை (நிலை) எண். 114, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ஏ) துறை, நாள். 12.09.2013.
3. அரசுக் கடித எண். 41169/A/2014-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஏ) துறை, நாள். 03.11.2014.
4. நீதிப் பேராணை மனு எண். 20527/2014-ல் சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 01.08.2014-ம் நாளிட்ட உத்தரவு.
5. அரசாணை (நிலை) எண். 99, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ஏ) துறை, நாள். 21.09.2015.

******

பார்வை ஒன்று மற்றும் இரண்டில் காணும் அரசாணைகளில் அரசு அலுவலகங்களில் நேரடியாக மற்றும் மின்னஞ்சல் வாயிலாக பெறப்படும் குறைகளைவு மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(தபியா)

2. பார்வை மூன்றில் காணும் கடிதத்தில், மேற்கூறிய அரசாணைகளில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை, அனைத்து அரசு அலுவலகங்களும் தவறாது கடைபிடிக்குமாறும், அனைத்து அரசு அலுவலகங்களும் தங்களுக்கு கீழுள்ள சார்நிலை அலுவலகங்களுக்கு, மேற்கூறிய உத்தரவுகளின்படி செயல்பட வேண்டும் என்று தெரிவிக்கும்படியும் மீண்டும் அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

3. இதனைத் தொடர்ந்து, பார்வை 4-ல் காணும் நீதிப் பேராணை மனு எண். 20257/2014-ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில், குறைகளைவு மனுக்கள் பெறப்பட்ட நாளிலிருந்து அதிகபட்சமாக 30 நாட்களுக்குள், குறிப்பிட்ட ஆணையுடன் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைகளை சரிசெய்ய சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தும் அரசாணையை வெளியிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏதேனும் சில காரணங்களால் கூடுதலான கால அளவு தேவைப்படுமாயின், நீட்டிக்கப்படும் கால அளவு குறித்து முறையீடு செய்த நபருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. அதன்படி, அரசு அலுவலகங்களில் நேரடியாக மற்றும் இணையம் வாயிலாகப் பெறப்படும் குறைகளைவு மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பார்வை 5-ல் காணும் அரசாணை வாயிலாக கீழ்க்காணும் திருத்தியமைக்கப்பட்ட நடைமுறைகள் வெளியிடப்பட்டன:-

(i) குறைகளைவு மனு பெறப்பட்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள் மனுவைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை உடனடியாக அனுப்பப்பட வேண்டும்.

(ii) குறைகளைவு மனு பெறப்பட்ட நாளிலிருந்து அதிகபட்சமாக ஒரு மாதத்திற்குள் குறை களையப்பட வேண்டும். தீர்வு செய்யப்படுகிற அல்லது நிராகரிப்பு செய்யப்படுகிற நேர்வில், அவசியம் என்று கருதினால், குறிப்பிட்ட ஆணையுடன் அது தெரிவிக்கப்பட வேண்டும்.

(iii) குறைகளைவு மனுக்கள் வழங்கிய குடிமக்கள் அரசுத்துறைகளை அணுகும் போது, அவருடைய (ஆண்/பெண்) குறைகளைவு மனுவின் மீதான நடவடிக்கை தொடர்பான நிலையினை அவர்களிடம் தெரிவித்தல் வேண்டும்.

(iv) ஏதேனும் காரணங்களால் மனுவை இறுதிசெய்ய கூடுதல் கால அளவு தேவைப்படுகிற நேர்வில், குறைகளைவு மனுவை அளித்த நபரிடம், மனுவை இறுதி செய்வதற்கான நீட்டிக்கப்பட்ட கால அளவு குறித்து எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட வேண்டும்.

(v) மனுதாரரின் கோரிக்கையை ஏற்க இயலாத நேர்வில் அதற்குரிய காரணத்துடன் கூடிய பதிலை பாதிக்கப்பட்ட குடிமகனிடம் வரையறுக்கப்பட்ட கால அளவான ஒரு மாதத்திற்குள் தெரிவிக்கலாம்.

4. இருப்பினும் நாளடைவில், அரசு அலுவலகங்கள், குறைகளைவு மனுக்களை கையாள்வதில் மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்களை கடைபிடிப்பதில்லை என்பது தொடர்பான புகார்கள் பொதுமக்களிடமிருந்து அரசுக்கு வந்த வண்ணமே உள்ளன. எனவே,

இது தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகள் மற்றும் அரசுக் கடிதம் ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை அரசு அலுவலகங்கள் அனைத்தும் தவறாது கடைபிடிக்க வேண்டுமென்றும், மேலும் அனைத்து அரசு அலுவலகங்களும், தங்களுக்கு கீழுள்ள சார்நிலை அலுவலகங்களை மேற்கூறிய அறிவுறுத்தல்களை தவறாது கடைப்பிடிக்குமாறு வலியுறுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

21/3/18

அரசு செயலாளருக்காக

20/3/18

<u>நகல்:-</u>

அரசு தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை – 9.

அரசு செயலாளரின் தனிச்செயலர்,
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 9,

இருப்புக்கோப்பு / உதிரி நகல்கள்